புலவர் பொ. பொன்னம்பலம் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால அரசு ஆட்சி செய்த நேரத்தில் கட்டிக் கொடுக்கப்பட்ட அரிசனக் காலனிகள் உள்ள வீடுகள் இடிந்திருக்கின்றன. அதற்குக் காரணம் என்ன? காலனியில் உள்ள வீடுகளைக் கட்டியவர்கள் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்க உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கடந்த காலத்தில் கட்டப்பட்ட வீடுகளில் சில வீடுகள் இடிந்துவிட்டதாகப் புகார்கள் வந்திருக்கின்றன. அதற்காக யார்மீதும் நடவடிக்கை எடுக்க அரசாங்கம் உத்தேசிக்கவில்லை. கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளை அரிசன மக்களேதான் பாதுகாக்க வேண்டும். வீடுகளைச் செப்பனிடுவதுகூட அவர்களுக்குப் பொறுப்பில்லாமல் அதைக்கூட அரசாங்கமே செய்து கொடுக்கின்ற நிலையில்லை. ரிப்பேர் செய்துகொடுப்பதற்கு அரசாங்கத்திடம் திட்டம் இல்லை. கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகளைப் பாதுகாத்துக் கொள்வது அவர்களுடைய பொறுப்பாகும்.

Loans given to agriculturists in Krishnagiri taluk.

* 664 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state the amount given as loan to agriculturists under the package scheme of A.D.T. 27 paddy in Krishnagiri taluk in Dharmapuri district in the year 1967–68 and the paddy yield increase consequently?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மும்முரவிடும் திட்டத்தின் கீழ் நெல் பயிரிட 1967-68-ம் ஆண்டில் கிருஷ்ணகிரி வட்டத்திற்கு ரூ. 11,00,000 பிரித்துக் கொடுக்கப்பட்டது. ஆடுதுறை மற்றும் ஏனைய நெல் ரகங்களைப் பயிரிட ரூ. 8.97 லட்சம் வரை தருமபுரி மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கி கடனாகவும் கொடுத்தது.

2. கடன் வழங்கியதன் மூலம் ஆடுதுறை 27 நெற்பயிர் முதல் போகத்தில் மொத்த உற்பத்தி அதிகரிப்பு 2,500 டன் என்று மாவட்ட ஆட்சித் தலைவரால் மதிப்பிடப்பட்டது. இந்தப் பகுதியில் மழை பெய்ததன் காரணமாக, இரண்டாம் போகம் விளையவில்லை.

THIRU B. VENKATASWAMY : Is it not a fact that 50 per cent of the poduction was decreased in Krishnagiri project area in 1967–68 because peasants were forced to plant ADT 27 where ADT 27 is not suited to that area since it contained more alkalinity? If so, may I know the 'value loss' that occurred to the ryot due to the ADT 27 plantation?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அப்படி ஏதாவது இருப்பதாக அரசாங்கத்திடம் எந்தவிதமான குறிப்பும் இல்லை.